உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - தொல்புரம் வாசரும்
உயர் வேளாண்குல திலக மரபினரும்
பிரதிப் பொலிஸ்மா அதிபருமான

# திரு. பொன்னம்பலம் இராஜேஸ்வரன்

அவர்களின்

# நிறைநாள் நினைவுகள்

22 - 09 - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திரு. பொ. இராஜேஸ்வரன் அவர்களின்

(பிரதிப் பொலிஸ்மா அதிபர்)



# நிறைநாள்

# நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

# அமரர்

# திரு. பொ. இராஜேஸ்வரன் அவர்கள்

( பிரதிப் பொலிஸ்மா அதிபர் )



தூல முகிழ்ப்பு:
31 - 07 - 1931

தூல அவிழ்ப்பு:
7 - 08 - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் சில சுவடுகள்!

செய்யும் தொழிலே தெய்வம் என்றபடி உற்றார் உறவினர் பெண்டிர் பிள்ளைகளைச் சதமெனக் கருதாது கடமையே கண்ணெனக் கருதிக் காவல்துறையின் மூத்த அதிகாரியாக, வடமாகாணத்திற்குப் பொறுப்பாக ஆக்கப்பட்டமையினலே அனியாய அழிப்புக்கு ஆளானவர் திரு. இராஜேஸ்வரன் அவர்கள். ஆட்சிக்கு உரியன் எனினும் காட்சிக்கு எளியன், கடுஞ் சொல்லன் அல்லன் என்றும், நண்ணினர்க்கு நல்லன் என்றும் பேசப்படுபவன்.

அமரர் திரு. இராஜேஸ்வரன் அவர்கள் வைத்திய கலாநிதி திரு. பொன்னம்பலமவர்களுக்கும் விஜயலட்சுமிக்கும் சிரேஷ்ட புதல்வனுகப் பிறந்தவர். மிக இளமையிலேயே தாயை இழந்த தனையனுக்குத், தாயின் வெற்றிடத்தை நிரப்பிய திருமதி தங்கம்மாவின் அரவணைப்பு, கவலையைப் போக்கி கல்வியில் கருத்தூன்றச் செய்தது. மலேசியாவில் பிறந்தமையினல் தனது ஆரம்பக் கல்வியை அங்கேயே பெற்ருர் எனினும் உயர்கல்வியை கொழும்பிலுள்ள சென். தோமையார் கல்லூரியில் பெற்ருர். கல்வியிலே சிறந்து விளங்கியதோடு, உடல் வளர்ச்சிக்கு வேண்டிய விளையாட்டுத் துறையிலும் வீரனுகத் திகழ்ந்தார். மாணவனுக இருந்தபோது முதல்வனுகத் தலைவனுகத் திகழ்ந்து ஆசிரிய மாணவரின் மதிப்புக்குரியவனுக இருந்தார். உள வளர்ச்சியோடு உடலையும் சேர்த்து வளர்த்தமை இலங்கை காவல் துறையினருக்கு வேண்டிய ஒரு முழு மனிதனைப் பெறும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்கமைய இலங்கைப் பொலிஸ் பகுதியினர் இவரை 1956 ஆம் ஆண்டு தமது சேவையில் சேர்த்துக் கொண்டனர். உதவிப் பொலிஸ் பரிசோதகராகச் சேர்ந்த திரு. இராஜேஸ்வரன் தனது திறமையினல் பொலிஸ் அத்தியட்சகராக உயர்வுபெற்று, பிரதிப் பொலிஸ்மா அதிபராக மருணித்தார். இலங்கையில் பல பாகங்களிலும் சேவையாற்றிப் பலருடனும் பழகும் பேற்றினைப் பெற்றவர்.

தந்தையார் பொன்னம்பலமோ வைத்திய கலாநிதி, சமாதான நீதவான் என்ற வகையிலே மக்களின் உடல் உளத் துன்பங்களைப் போக்கும் காவலனுக இருக்கத் தனையனே தானும் அதற்குச் சளைத்தவனல்ல என்பது போல காவல்துறையில் மக்கள் காவலனுகப் பணி ஆற்றியமை எண்ணி வியக்கத் தக்கது.

ஒரு மனிதனின் மண்ணுலக வாழ்வு நிறைவு பெறுவது மனைமாட்சியோடு மக்கட் செல்வங்களையும் பெறுவதோடாகும். அதற்கமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரின் விருப்பப்படி தொல்புரம் பதி கனகசுந்தரம் அவர்களின் ஏகபுத்திரி திலகஞானத்தைத் தன் தாரமாகக் கொண்டு, மக்கட் செல்வங்களாக நால்வரைப் பெற்றவர். தாயின் உடன் பிறப்புக்களான திருமதி இராமச்சந்திரர், திருமதி சோமாஸ்கந்தர் ஆகியோரைக் காணில் உள்ளம் உவந்து அன்பு மீதூரப் பேசுவது தாயை இளமை யிலே இழந்ததனுல் ஏற்பட்ட தாகமோ என எண்ண வைக்கும், சகோதரர் மித்திரரோடு உறவாடி உடனிருந்து உணவு உண்ணும் பாங்கு மறக்க முடியாதது. உள்ளத் தூய்மையும் இறை அன்பும் உடையவர் என்பதாற்முன் தனக்குத் தீங்கு செய்ய ஒருவன் இருப் பான் என்பதை எண்ண முடியாது செய்து விட்டது. அதன் விளைவே இப்பரிதாப உயிரிழப்பாகும்.

தனது சக ஊழியர்களின் குடும்ப வாழ்வில், நலனில் அக்கறை கொண்டு அதற்காக அவர்களுக்கு லீவு வழங்கித் தான் அவர்கள் வேலையைச் செய்த தண்ணளியாளன். பண்பிலே தெய்வமாய்ப் பார்வை யிலே சேவகனுய் விளங்கிய திரு. இராஜேஸ்வரன் அவர்களை 7-8-88 அன்று படைத்தவன் அனியாய வேட்டுக்கள் மூலம் அவரின் இவ்வுலக வாழ்வினை முடித்துக் கொண்டான். அன்னுரின் ஆன்மா சாந்தி அடை யப் பிரார்த்திக்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிப் பொலிஸ்மா அதிபர்

## பொன்னம்பலம் இராஜேஸ்வரன்

அவர்களின் இழப்புக் குறித்து

**பிரம்மஸ்ரீ ப. சிவானந்தையர் அவர்கள் இயற்றிய**

# இரங்கற்பா

### வெண்பா

ஆண்டு விபவதன்னில் ஆவணியைச் சாரபரம்
பூண்ட வேகாதசியைப் புல்குகதிர் - மாண்குணங்கள்
தங்குமிரா சேஸ்வரனர் தன்னுடலம் விட்டகன்று
நங்கையரன் தாளடைந்த நாள்.

### ஆசிரியப்பா

விளம்புறு மிலங்கா தீவின் வடபால்
மன்னுயாழ்ப் பாண மாநக ரதன்கண்
மாபலா வாழை யாதியாம் தருக்கள்
செழிப்புற் ேறாங்கும் செம்மை சான்றதும்
ஆலயம் தம்மொடு அமையும் வித்தியா
சாலை விளங்கும் சால்பு மிக்கதும்
பொற்பு மிக்குறு பூவையர் தம்மொடு
கற்பின் நெறிவழாக் கன்னியர் பலரும்
தங்கி வைகுறும் தகைமை யுற்றதும்
ஆகு கருகம் பனையெனும் பதிக்கண்
வந்தருள் வேளாண் வம்சத்துற்றோன்
வன்னி ராய முதலி வழிவரு
பூதப் பிள்ளையா மொப்பிலா மகிபன்
வள்ளிநாயகி எனும் வனிதையை மணந்தே
இல்லறத் தாற்றும் நல்லறப் பயனாய்
வந்த வதரித்த மாநில மகிபன்
வைத்திய கலாநிதி யாகித் திகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம் பலமெனப் புகன்றிடு நாமன்,
டாக்டராக எய்து நன்மேலோன்
காசினி போற்றும் கதிர்காமத்தம்பி
பாறுவதி யெனும் பாவையை மணந்தே
புவியினிற் பெற்ற பூவையர் திலகம்
விசய லட்சுமியென விளம் புறுதையல்
இல்லறத் துணையாய் இந்நிலத் துறவே
வாழ்க்கை நடாத்தி வையகந் தன்னில்
செய்த தவத்தினி லெய்தியமைந்தன்
மலேசியா தன்னில் மன்னும் ரூகூப்
தன்னிற் பிறந்தே தான்கலை பயின்று
கல்கிசை தன்னிற் கருதுசென் தோமியார்
கல்லூரி தன்னில் மேற்கலை பெற்று
குரூந்த லாவையிற் குலவு சென்தோமியார்
கல்லூரியில் கருதுமாசிரியர்
சேவை யாற்றிய செம்மலானோன்
பாடசாலையிற் பயின்றிடு நாளில்
சார்ந்திடு றக்பித்தலைவ ராஞேன்
மாணவர் தலைவனாய் மன்னிய மகிபன்
பின்னுளதனிற் பொருந்திடு பொலிசார்
சேவையிற் சேர்ந்து திகழ்ந்திடு முதவிப்
பரிசோ தகராய்ப் பகர்ந்திடு தலைமைப்
பரிசோ தகராம் பதவி வகித்து
நாடொறும் வளர்ந்தே நானிலம் போற்ற
பொருந்தும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்
ஆக விளங்கி யரும்புகழ் பெற்றோன்
ஓவசியராகும் ஒப்பிலா மகிபன்
குணரத்தினந்தன் குலவுநற்றுணைவியாய்
மகாலட்சுமி யொடு மன்னும் மகேந்திரன்
குலேந்திர னென்னக் குலவு நன்ஞமன்
விஜயலட்சுமி விளங்கும் ரவீந்திரன்
கணேந்திர னென்னக் கருதுநன் மகிபன்
புத்திரராகப் புவியினிற் பெற்ற
இராசேஸ்வரி யெனஎய்து நல்நங்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகர் கூட்டுறவுப் பரிசோ தகராம்
சச்சிதானந்தம் தன்மனையாளாய்
லோகேஸ்வரியொடு உற்றவைத்தீஸ்வரன்
தன்மக்களாகத் தான் மகிழ்ந்துற்ற
பரமேஸ்வரி யெனும் பாவைதானும்
உடன்பிறப்பாக வுற்றநன் மேலோன்
பொன்னம் பலமெனப் புகன்றிடு தந்தையார்
தன் முதல் மனையாள் தரணியில் மறைய
வள்ளிப் பிள்ளையாம் வனிதையை மணந்தே
செகதல முதல்வன் சின்னத்தம்பியார்
புவியினிற் பெற்ற பூவையர் திலகம்
தங்கம்மாவெனும் தையலை மணந்தே
பெற்று மகிழ்ந்த பெரும் புகழாளர்,
அமைந்திடு ரசாயன ஆய்வுகூட
அத்தியட்சகராய் அரும்பணி ஆற்றிய
பாலகிருஷ்ணன் தன்பகர் மனையாள்
மங்கையர் திலகம் மகேஸ்வரி நல்லாள்,
யாழ்திறைசேரியிற் குலவரசாங்கத்து
எழுது வினைஞராம் இரும்புகழாளன்
மன்னுசுப்பிர மணிய சாமி
தன்துணையாகிய தையலர் திலகம்
புவனேஸ் வரியெனப் போற்றிடு தையல்,
இரத்தினம் பிகைதன்னை மணந்தே
இரதனி இராஜி இரமணன் என்போர்
தம்மைப் பெற்ற தகைமையாளன்
பாங்கொக் தன்னில் பகர் முகாமையாளர்
இராசேந்திரமெனு மாநில முதல்வன்;
சாரூப குமாரி தன் துணையாக
அருணன் அருச்சுனன் அமரன் என்போர்
மக்களாக மா நிலத்துற்ற
சட்டத் தரணியாய் லண்டனிற் றிகழும்
அருளம் பலமெனு மரியநன் ஞமன்,
நாகேஸ்வரி யெனும் நங்கையை மணந்தே
கேதீஸ் வரியொடு திகழும் சுதாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமித்த னென்னச் சொல்லு நன்மேலோன்
தம்மைப் பெற்ற தாரணி முதல்வன்
மேவு பீ. பீ. சி. மேற்பார்வை யாளன்
இரு நிலமுதல்வன் இளையதம்பி
வட்டுக்கோட்டையில் வைகித் திகழும்
திருஞான சம்பந்த வித்தியா சாலை
ஆசிரியராகும் அரும் புகழுற் ருேன்
தேவதாசனும் செம்மலை மணந்தே
தேவசுந்தரியெனும் தேவியர் திலகமும்
வசந்த குமாரொடு சுவர்ண குமாரும்
தேமொழி பேசும் தேவகி தானும்
புத்திரராகப் புவியினிற் பெற்ற
கருது நல நங்கை கமலா தேவி
ஸ்ரேளிங் பங்காளராய் எய்து காசாளராய்
திகழ் சகாதேவன் சேர்ந்திடு துணைவியாய்
செந்தில் குமரல் சேரும் தயாளினி
ஜெயக் குமாரொடு திகழும் நந்தினி
தன்னரும் மக்களாய்த் தரணியிலுற்ற
கமலாம் பிகையெனக்கருதிடு நங்கை,
லண்டன் மாநகரில் எய்திவிளங்கும்
சாந்தில் குமார்தன் சார்ந்திடு துணைவியாய்
முகுந்தனேடும் உற்றிடு மேனகா
தம்மைப் பெற்ற தையல் நல்லாள்
நகுலேஸ் வரியெனும் நங்கையர் திலகம்,
லண்டனி லெய்திய இரும்புகழாளன்
ஞானேஸ் வரியெனும் நங்கையை மணந்தே
கஜனெனு நாமன் கருது பொன்னம்பலம்
தன்னரும் மக்களாய்த் தான் மகிழ்ந்துற்ற
நகுலேஸ் வரனென நண்ணுநன் மேலோன்
தன்சோதரரெனத் தரணியிலுற்ருேன்
பெரிய தகப்பனுர் பெரு மகனுன
நீதி யரசராம் வைத்திய லிங்கம்
சொந்த அண்ணன் என்று சொல்லியே
மகிழ்வுடன் போற்றிய மாண்புமிக் குடையோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன்தாய் மறைந்திட தகப்பனுர் மணந்த
தங்கம்மாவே தாயென விருந்து
பாரினில் வளர்ந்த பண்பு படைத்தோன்
தொல்புர மென்னச் சொல்லும் பதிசார்
கனக சுந்தர முதலி வழிவரு
காசினி போற்றும் கனகசுந்தரம்
சிவஞானவதி யெனும் தேவியை மணந்த
புவியினிற் பெற்ற பூவையர் திலகம்
பார்புகழ் மகிபன் பாலகிருஷ்ணன்
தேவதாசனும் சீர்சால் மகிபன்
உடன் பிறப்பாக வுற்றநன்மாது
தேவியர் போற்றும் திலக ஞானம்
மனையாளாக மாநிலத் துறவே
வாழ்வு நடாத்திய வையக முதல்வன்
நோர்வே தன்னில் தங்கி வைகியே
பகர் தொழில் நுட்பக் கல்லூரியினிற்
பயிற்சி பெற்றிடும் தேவராசனும்
கடல்வாழ் உயிரினம் பற்றிய கல்வி
தன்னிற் பயின்றிடும் தர்மராசனும்
கருது மருத்துவக் கல்லூரி தன்னில்
வைத்தியக் கலைபயில் கேசவ ராணியும்
கருது யாழ்ப்பாணக் கல்லூரி தன்னில்
உயர் கலைபயிலும் உத்தமச் செல்வி
சொரூப ராணியாம் தோகை நல்லாளும்
புத்திர ரென்னப் புவியினிலுறவே
மகிழ்வு கொண்டுற்ற மாநில மகிபன்
தன்னெடு சேவை யாற்றிடும் மற்றோர்
தமக்குறு உதவிகள் தான் புரிந்துற்றே
அவர்களைப் பேணிய அருங்குண மகிபன்
உயர் பதவியினி லுற்றிருந்தாலும்
மற்றோர்க் கெளியனய் வாழ்ந்தநன் மேலோன்
மனையாள் மக்கள் மற்றுள சோதரர்
2

சுற்றத்தாரொடு மற்றுளோர் யாவரும்
ஆறாக் கவலை கொண்ட வனியிலிரங்கத்
தன்வாழ் வொழித்துத் தான் மறைந்தனரே.

## தேற்றம்

எங்களிராஜேஸ்வரனார் எய்துடலம் விட்டகன்றார்
இங்குள்ளார் என்னே இரங்குகின்றீர் — தங்கும்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உப சபாநாயகரின் உலாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆருயிர் நண்பன்

## அமரர் இராஜேஸ்வரன்

அமரத்துவமடைந்த பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. போ. இராஜேஸ்வரன் அவர்களுடன் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். இவர் பழகுவதற்கு சிறந்த நண்பரும் உயரிய பண்பாளருமாவார். நான் இவருடன் பழகிய நாட்கள் ஒருபோதும் என் நினைவைவிட்டு அகலா. இத்தருணத்தில் அவரது வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றைக் கூறவிரும்புகின்றேன்.

இவர் தனது பள்ளிப் படிப்பை கொழும்பு மாநகரில் சென் தோமஸ் கல்லூரியில் பயின்றார். இவர் படிப்பைப் போல் விளையாட்டுத் துறையிலும் மிகவும் சிறந்து விளங்கியதனால் இலங்கை பொலிஸ் துறையில் உதவி பொலிஸ் அதிகாரியாக பதவி பெற்றார். இவர் எந்த ஒரு பொறுப்பை ஏற்றாலும் அதனைச் செவ்வனே செய்து முடிக்கும் பண்பினைப் பெற்றவர். இதனால் இவருக்கு பதவி உயர்வுகள் தானாக வீடு தேடி வந்துகொண்டு இருந்தன.

அன்னார் தன்னின மக்களுக்கும், தன் நாட்டுக்கும் செய்த சேவைகளை வார்த்தைகளால் கூறிவிடமுடியாது. அவற்றில் ஒன்றிரண்டை இங்கு நான் கூற கடமைப் பட்டுள்ளேன்.

1977ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது குருநாகலில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும், 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது மன்னாரில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் ஆற்றிய அளப்பரிய துயர் துடைக்கும் சேவைகளை எமது தமிழ் மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருவர். இக்கால கட்டத்தில் அமரர் இராஜேஸ்வரன் உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமை யாற்றியது குறிப்பிடத்தக்கது.

இவர் தனது வாழ்நாளில் தன்னலமில்லாது மக்களுக்காக வாழ்ந்தார். இன்றைய கால கட்டத்தில் தமிழர்கள் இப்படிப்பட்ட பெரிய பதவிகளை வகிப்பது காணுதற்கரிது. இந்த நேரத்தில் இவர் எம்முடன் இல்லாதது எம்மின மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். தனிப்பட்டமுறையில் எனக்கும் ஓர் பேரிழப்பாகும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டுக்கு இவர் உயிர் கொடுத்து வாழ்ந்து காட்டிய செம்மலாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இனிமையான பழகும் சுபாவமும் எளிமையான ஆடம்பரமற்ற வாழ்க்கையும் அன்னாரின் வாழ்க்கையின் வெற்றிக்கு துணையாக அமைந்தது.

புவியிலே நல்லவர்களை நீண்டநாட்கள் வாழக் காலன் ஒருபோதும் விடுவதில்லை. அதற்கமைய இராஜேஸ்வரியையும் அவன் விட்டு வைக்கவில்லை.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள் மற்றும் சுற்றத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!!

Dr. ஆ. இராஜநாயகம்

தொல்புரம்.

(பிராந்திய பதிவு பெற்ற வைத்திய அதிகாரி)
அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அப்பா!

என் அன்பு அப்பாவே நீங்கள் என்னை சொரூபா சொரூப் என்று எந்நேரமும் அன்புடன் அழைப்பீர்களே. இனி யார் என்னை அப்படி அழைப்பது. அப்பா நான்தான் உங்களுடன் எப்போதும் இருக்கவேண்டும் என்று சொல்வீர்கள். இப் போது என்னை தனியே விட்டு விட்டு சென்றுவிட்டீர்களே. அப்பா நான்தான் உங்கள் செல்ல மகள் என்று எல்லோரிட மும் சொல்லுவேனே. நான் ஏதும் தப்புச் செய்து அம்மா என்னை அடிக்கவந்தால் அப்பாவிடம் சொல்லிக் கொடுப்பேன் என்று உங்களிடம் வந்து சொல்லுவேனே. இனி யாரிடம் போய் சொல்லுவேன், யாரை அப்பா என்று கூப்பிடு வேன்.

அப்பா உங்கள் அன்புக் குழந்தைகள் நால்வரின்மேலும் வித்தியாசம் இன்றி அன்பு செலுத்துவீர்களே! யார் என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பீர்களே. நீங்கள் அதட்டிப் பேசியதை நாம் கேட்டதில்லை. கை நீட்டி அடித்ததையும் நாம் கண்டதில்லை. ஏதும் தப்புச் செய்தால் உங்கள் பார் வையாலேயே உணர்த்துவீர்களே. நீங்கள் எவ்வளவு அன் பானவர் அப்பா! அப்பா உங்கள் பிள்ளைகள் எதிர்காலத் தில் எப்படியெல்லாம் இருப்பார்கள் என்றெல்லாம் சொல்லி நடித்துக் காட்டுவீர்களே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பட் டப் பெயர்கள் சூட்டி செல்லமாக அழைப்பீர்களே. உங்கள் குறும்புப் பேச்சுக்கள் அம்மாவையும் விட்டுவைப்பதில்லையே இனி எப்போது உங்கள் குறும்புகளைப் பார்க்கப்போகிறோம். அப்பா. அம்மா தனிமையில் வேலை செய்கிறா என்று எங் களை உதவி செய்யச் சொல்லி அனுப்புவீர்களே, யாரிலும் நோகாமல் பார்ப்பீர்களே. மனம் நொந்து அழுகிறோம் உங் களுக்குக் கேட்கவில்லையா அப்பா!

அப்பா நீங்கள் எந்தச் செயலை எடுத்தாலும் மிகவும் நிதான மாகவும் சிந்தித்தும் செய்வீர்களே! வேலைத்தலத்திலும் சரி வீட்டிலும்சரி எல்லோருக்கும் முன்னோடியாகவும் வழி காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாகவும் நின்று எல்லாவற்றையும் செய்வீர்களே! இனி யார் எமக்கு வழிகாட்டியாக துணையாக நின்று எல்லாம் செய்வது. எல்லோரது குறைகளையும் கேட்டு ஆறுதல் சொல் வீர்களே. இனி யாரிடம் போய் எமது குறைகளைக் கூற. அப்பா நீங்கள் யாரை எங்கு கண்டாலும் நலம் விசாரித்து கதைப்பதில், உதவி செய்வதில் உங்களுக்கு நிகர் நீங்கள் தான். எல்லோரும் உங்களைப்பற்றி சொல்லக் கேட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன் அப்பா! உங்களுக்கு மகளா கப் பிறப்பதற்கு நான் என்ன தவம் செய்தேன். எனக்கு நல்ல அன்பான அப்பாவை தந்த இறைவன் இடையில் தன் னிடம் அழைத்துக்கொண்டுவிட்டான். எங்களைவிட்டுப் பிரிந் தாலும் என்றும் எங்கள் உள்ளத்தில் இருந்து அன்பாசி செய்வீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

சொரூபா சொரூபா என்று நித்தம்
சொரூபாவிற்காகவே யாவும் செய்யும்
உருக்கமுள்ள அப்பாவே! இன்று உங்கள்
உள்ளன்பைக் கவர்ந்த மகள் ஏங்கி நின்று
அழுகின்றேன் ஓடி வந்து
பிரியமுடன் எனையணைத்து
மீண்டும் எந்தன் நெஞ்சத்திலே
ஆறுதல் தாரீர் அப்பா!

இப்படிக்கு
உங்கள் அன்பு மகள்
சொரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமமே கண்ணாயினர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவன் பொன் மொழிக்கு ஒப்ப வாழ் வாங்கு வாழ்ந்த உயர்திரு பொன்னம்பலம் இராஜேஸ் வரன் ஐயா அவர்கள் 1988-08-07 ஆம் நாள் இறைவ னடி சேர்ந்தமை குறித்து யாழ் பொலிஸ் பிராந்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் ஆகிய சகலரினது சார்பிலும் ஒருசில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பாடுள்ளேன்.

1931-07-31 ஆம் திகதி இப்புவியில் அவதரித்த திரு. இராஜேஸ்வரன் அவர்கள் தனது நாட்டுக்கு நற் சேவைபுரிய வேண்டுமெனும் ஆர்வத்துடன் 1956-01-01 ஆம் திகதி பொலிஸ் சேவையில் உதவிப் பொலிஸ் பரி சோதகராகச் சேர்ந்து சேவையாற்றத் தொடங்கினார். இவரின் நற்பண்புகளையும், தனது கடமையில் காட்டிய அதிசிரத்தையையும், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய கோட்பாடுகளையும் மெச்சிய பொலிஸ் திணைக்களம் காலக் கிரமத்தில் இவரைப் படிப்படியாகப் பொலிஸ் அத்தியட் சகர் பதவிவரை பதவி உயர்த்தியதுமல்லாமல் இவருக்கு "இலங்கை பொலிஸ் நீண்டகால சேவை, நல் நடத்தை" ஆகிய வற்றுக்கான பதக்கத்தை (Ceylon Police Long Service and good Conduct Medal) யும் வழங்கிக் கௌள ரவித்தது.

இவர் தன் கடமை காரணமாக 1988-08-07 ஆம் திகதி பொலிஸ் சாரதி திரு. வரப்பிரசாதம் போல் அவர் களுடன் சென்றவிடத்து அகால மரணமான செய்தி எம் எல்லோரையும் அதிர்ச்சியிலும் ஆறாத் துயரத்திலும் ஆழ்த் தியுள்ளது. திரு. இராஜேஸ்வரன் அவர்களின் அரிய சேவைக் காக இவர் மறைந்த அன்று பிரதிப் பொலிஸ் மா அதிப ராக (மரணித்த பின்) பதவி உயர்வு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்த வாழ்க்கையையும் சீரியதாக்கும் வண்ணம் இவர் திலகஞானம் என்னும் பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு தேவராயன், தர்மராஜன், கேசவராணி, சொரூபராணி ஆகிய புத்திர பாக்கியமும் பெற்று ஒரு இல்வாழ்வான் இயற்றும் சகலவித தானதர்மாதிகளையும் இயற்றி மேம்பட்ட குடும்பத் தலைவனாகவும் திகழ்ந்தார்.

தனது சேவைக்காலத்தில் நீதி திறம்பாது பணியாற்றுவான் வேண்டி, பற்பல இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் ஆளான போதிலும், நீதியே ஈற்றில் வெல்லும் என்ற துணிவுடன் யாவற்றையும் சகித்து வாழ்ந்து வெற்றியும் கண்டார்.

எந்தவொரு உயரதிகாரிக்கும் அமைய வேண்டிய குணாம்சங்கள் அத்தனையுமே இவர்பால் நிறைந்திருந்ததை நாம் காணக்கூடியதாய் இருந்தது. இவற்றில் அதிவிசேடமாக குறிப்பிட வேண்டிய அம்சமாகத் திகழ்வது, யாராயினும் எவ்வேளையிலும்சரி தமது குறைகளை மனம்விட்டுக் கூறுமிடத்து அவற்றைச் சலிப்போ, வெறுப்போ இன்றி இன்முகத்துடனும் பொறுமையுடனும் செவிசாய்த்துத் தன்னாலான தன் வரம்பிற்குட்பட்ட சகலவித உதவிகளையும் கடமைகளையும் மிகுந்த உற்சாகத்துடன் நிறைவேற்றிக் கொடுக்கும் தெய்வீக அம்சமாகும். "மக்கள் சேவை மகேசன் சேவைக்கு ஒப்பானது" என்னும் முதுமொழிக்கு அமைவதால் இதை தெய்வீக அம்சம் என்று கூறினல் அது மிகையாகாது.

எம்மையெல்லாம் கண்டிக்க வேண்டிய விடத்து கண்டித்தும், தண்டிக்க வேண்டிய விடத்துத் தண்டித்தும் வழி நடத்தியமையால் எமக்கு ஒரு தந்தையாகவும், எம் சேவையிலும் வாழ்விலும் முன்னேற்றம் பெறும்வண்ணம் எமக்கு நற்புத்தி புகட்டி எம்மை ஈடேற்றியமையால் எமக்கு ஒரு சற்குருவாகவும், சாதாரண நேரங்களில் எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடன் அன்பாய்ப் பழகி இடுக்கண் வருங்கால் அவற்றைக் களைந்து எம்மை மகிழ்வித்தமையால் எமக்கு ஒரு உற்ற நண்பனுகவும் திகழ்ந்தவர் திரு. இராஜேஸ்வரன் ஐயா அவர்கள்.

நாம் அனைவரும் இவரை ஒரு உதாரண புருஷராக மதித்து இவரின் நற்பண்புகளையும், நற்கோட்பாடுகளையும் பெரும் சகிப்புத் தன்மையையும் மேற்கொண்டு ஒழுகுவோமேயானல் இது இவருக்கு நாம்செய்யும் கைம்மாறுக்கு ஒப்பானதாகும் என்பது எனது நம்பிக்கை.

நாம் அனைவரும் கருமமாற்றக் கடமைப்பட்டுள்ளோம். நற்கருமங்களை நிறைவேற்றுதல் எளிதன்று. ஆன்ருேர் இதை ஆய்ந்து, உணர்ந்து, தெளிந்து நமக்குப் பாடல் உருவத்தில் விட்டுச் சென்றவற்றுள் ஒன்று பின்வருமாறு:

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற் கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயினுர்."

இவ்வான்ருேர் மொழிக் கொப்ப கடமையில் கண்ணுயிருந்து பற்று அற்றுப் பணியாற்றிய எம் தலைவன் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உயர் திரு பொன்னம்பலம் இராஜேஸ்வரன் ஐயா அவர்கள் ஒரு கடமை வீரன் அடையவேண்டிய மோட்ச சாம்ராச்சியத்தை எய்துவார் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பொலிஸ் அலுவலகம்
யாழ்ப்பாணம்.
1988-09-02

வி. கந்தசாமி
உதவிப் பொலிஸ் அத்தியட்சர்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P. RAJESWARAN

It was unexpected and shocking news from the troubled. North when the killing of late Mr. RAJESWARAN S. P. In-Charge of the Jaffna Division was received at the Information Room of the Police Hqrs, on 07-08-88

In everyone's mind the question was "Why was RAJES murdered?."

Lovingly and popularly known as 'RAJES' to his colleagues and superior officers none could arrive at any sensible reason for the cowardly murder.

'RAJES' who hails from a respectable family of Jaffna, had his early education at St. Thomas's College, Colombo. He took up to teaching and joined the service as a Sub-Inspector in the year 1956 and served practically in all parts of the Island, in many areas as Officer-in-Charge of Police Stations Officers who have worked under him and the members of the public who knew him as a Police Officer are still at loss to accept the truth that 'RAJES' is no more.

'RAJES' who was promoted to the Rank of an A. S. P. in the year 1978, became a Supdt. of police in the year 1984. 'RAJES' was a dedicated devoted loving husband and father When option came his way he volunteered to serve as S. P., Jaffna solely to be with his wife and daughter who had been living in temporary seperation in Jaffna due to 'RAJES' serving at the Police Headquarters, in Colombo.

For many officers who had known the simple, unassuming soft spoken and gentle 'RAJES'it will not be easy to wipe out the memory of an "Officer and a gentleman".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To his wife and children it is a loss of a devoted husband and father. To the Police Service, which he loyally served for the past 32 years, and to his colleagues it is an irreparable loss of a dedicated, loyal, honest and efficient officer.

We extend our sincere sympathies to his wife, children, brothers and sisters at this time of sorrow.

May his soul rest in peace.

02nd September 1988
Police Headquarters,
Colombo-1.

B. A. Jeyanathan
Snr. Supdt. of Police,
Police Headquarters.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அதிசய அனுதாபம்

மனைவியைக் கண்டார் மகிழ்வுடன் சென்றார் மரணத்தைச் சந்தித்தார். என்னே! மனிதனின் வாழ்வு. வெடியின் ஒலியாம் அவலக் குரலாம் மனைவியின் அலறலாம். வீட்டுக்கு வந்தவர் பொலிஸ்மா அதிபர் தான். ஐந்து பத்து நிமிடத்தில் சாரதி உயிருடன் தானும் போனார், உயிர் பிரியும்போது கடமையை நினைத்தாரா, மகளை நினைத்தாரா, அரசை நினைத்தாரா, மனைவியை நினைத்தாரா, அல்லது மனோவேகம் நோர்வேயின் மும்மக்களை நினைத்தாரா, திருக்கேதீஸ்வரத்தானே திருவாய் மொழி மலர வேண்டும். எத்தனை சகோதரங்கள் எத்தனை சுற்றத்தார், எத்தனை மித்திரர், எத்தனை எத்தனை ஆயிரம் தன் கீழ் பணிபுரிவோர். இதனை எல்லாம் நினைக்க வருமா? உயிர் பிரிந்த சண நேரத்திற்குள்.

மனு ஈசர் இதனை நினைத்தும் வாழ்கின்றனர். மனுஷர் இதனை நினைத்தும் நினையாமலும் வாழ்கின்றனர் மனுநீசர் இதனை நினையாமலே வாழ்கின்றனர்.

ஆனால் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் பெற்றெடுத்த பிள்ளைகளில் ஒருவரான இராஜேஸ்வரன் மன்னாரில் இருந்த காலத்தில் தமிழினின் மாபெரும் மகாநாடு நடந்த காலத்தில் அடியேனும் தற்செயலாக அங்கு நின்றிருந்தேன், அந்த நேரத்தில் இவருடைய நிர்வாக அமைப்புக்களை என்னென்று என்னால் வர்ணிக்க முடியாது. எவலோருக்கும் பாதுகாப்புக் கொடுத்த வண்ணம் கண்ணும் கருத்துமாய் நடமாடுவதை அவதானித்தேன். அங்குள்ளார் தங்களுக்குள் பேசியதாவது என்னவென்றால் இந்தப் பெரியவன் எம்மதத்துக்கும் ஒப்ப காவல் புரிந்தாலும் தினமும் திருக்கேதீஸ்வரத்தானை வழிபட்டு வருகிறவர். மனைவியோடுஞ் செல்வார், மக்களோடுஞ் செல்வார், தனித்தும் செல்வார் என்று சம்பாஷித்தனர். இதனால் இவருடைய இறை பக்தியை எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

இவர் கருகம் பனையிலும் பெரும் சைவ வேளாண் குலத்தினராய், கொடிகாமத்திலும் மாபெரும் சைவ வேளாண் குல மாதவர் சனகசுந்தரத்தின் மகள் திலகஞானத்தை வாழ்க்கைத் துணைவியாக்கி இல்லறம் நடத்தியவர்,

அரசாங்கம் பதவி உயர்வு கொடுத்ததை அனுபவிக்காது போனது அதிசய அனுதாபம் தானே!

சாரதியதும் இவரதும் ஆன்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

சி. மயில்வாகனம்,
J. P. அவர்கள்
மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ponnampalam Rajeswaran

## Deputy Inspector — General of Police

1. There are times in human life when one goes to the very brink of human emotions, to the brink of despair and even to the brink of sanity. Many of his dear friends expressed a similar feeling on his demise.

2. 'Rajes' as he was affectionately called was born with a silver spoon in his mouth and throughout his life, it was silver and gold on which he walked. Being the son of an illustrious father, Late Dr. Ponnampalam J.P. of Karugampanai, he showed great promise as a student and stirred great expectations in the hearts of his dear ones.

3. He joined the police Service on 01.01.1956 and readily showed his merit to the admiration and commendations of his superiors. As an administrator, he was par excellance for he earned the good will of all concerned from the bottom to the top and above all, he was really a father to most of us, a teacher, a willing advisor and a reliable friend.

4. Though most of us worked under him only for a short period of time yet the impact that short period produced was tremendous. We could observe his moral courage, unbending uprightness and fibre of his nerve everyone of which vibrated with a sense of honesty and devoted service.

5. He was an officer who consulted his own un-adulterated wisdom and took his decisions and never allowed himself to be influenced by others. Tales, reports, hear-says and back room gossips never prejudiced him against any of his subordinates.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


6. He lived for his own convictions and perhaps gave his life for them too. 31. 07. 88 was his 57th birthday and the party consisted of a few subordinates / friends whom he entertained with a hearty lunch. On that day, there was not a semblance of the shadow of death which was to strike him most brutally and insidiously the following week. He died on the 7th of August 1988, a bullet victim. Without 'Rajes' life seems light years away to most of his close associates and all too soon memories come crowding and drown everything else in the same way his remains were consumed.

May his soul rest in peace at the feet of God Almighty for ever.

( S. Rajalingam)
Headquarter Chief Inspector of Police,
Jaffna.
On Behalf Of The Jaffna Police.

Police Station,
Jaffna.
05-09-1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்மீக நாட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Ponnampalam Rajeswaran was born on 31-07-1931 in Malaysia, and after finishing his primary education he came over to Sri Lanka with his parents to continue his education at St. Thomas's College Mount Lavinia. He could have taken up to Medicine like his father or to Law, like his illustrious cousin late Mr. A. Vythilingam, but for reasons better known to him he decided to be a Police officer. He was appointed as Sup-Inspector of Police in the mid 50's Having served in many difficult stations in the Island he was promoted to the rank of Assistant Superintendent of Police in 1978. In 1986 he was appointed as a Superintendent of Police which he richly deserved. His perseverance, efficiency and intergrity were the secret of his success.*

*When I was Judicial Medical Officer Colombo on many occasions I had the opportunity to work with him very closely. He always believed that the investigator, the Forensic Pathologist and the Forensic Scientist have all a Part to play in the drama of crime detection. This team work very often paid him good dividends in solving many complicated crimes.*

*His life revolved around his work and his home. In 1960 he married Rani and their long and happy marriage was marred only by his demise. He is survived by his wife and four children, three of whom are doing their higher studies in Norway. May the Lord give him eternal peace and consolation to the members of his family.*

Professor N. Saravanabavananthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Some appreciation that appeared in the Papers.

The Island Wednesday 10th August, 1988

# P. Rajeswaran - An appreciation

by Carlyle Dias

The officers at police Hqrs. both Gazetted and Non-Gazetted are yet to recover from the shock at the news of the tragic and untimely death of P. Rajeswaran, Snbdt. of police Jaffna Division.

To every man upon this earth, death comes sooner or later, but the brutal manner in which "Rajes" as he was affectionately known, came by his death will remain a heinous crime. without parallel.

Rajes, was a lovable colleague, true and sincere friend. the memories of whom will linger in the hearts of all rliose who were privileged to know him. It is not always that one will meet a personality of the calibre of Rajes, in this long corridor of our life.

My association with Rajes was over 20 years and an unforgetable episode that crosses my mind was that much publicised Jaffna church Incident on X' Mas night in 1968 I was manhandled badly by a group of people and the message received by Rajes through the police driver was that I was done to death and lay in the premises of the church. Rajes with Mr Thavarajah then ASP Jaffna and Insp. pussella rushed with a police party to my assistance. This incident took an unprecedented turn and the police were accused with having desecrated a religious place. of worship in this incident when things were going black for the police not due to their fault. but 'POLITICS" Rajes whispered in my ear "Carlyle, I will sink or swim with you" This inci-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dent culminated with the then ASP Mr. Thavarajah. I. P. pussella, Rajes and self suffering interdiction This was the dedication he exercised for a friend even in the face of peril.

Born into a highly respected and God-Fearing family from Jaffna. Rajes was educated at St. Thomas' College, Colombo. Being a leading Cadet, an athlete of no mean repute he displayed his prowess as an outstanding hockey player. As Prefect. he was respected by all his contemporaries. He was for a short time was in the Tutorial staff of St Thomas' College, Guruthalawa, before he joined the Police. With all his achievements, the doors of the Police Dept. were wide open to him and was soon ready to serve his people. His brother Justice P. Vaithiyalingam walked through the halls of justice with eminent grace. but pre-deceased him.

Rajes was soft spoken, quite gentle and generous. but always maintained a high standard of discipline and acted without fear or favour. He was very popular with his peers as well as his subordinates. Fun-loving unassuming and ever willing to help anyone who sought his guide.

He was a very dutiful husband and a loving father whose demise creates an immeasurable void to the family and an irreparaple loss to those who knew him. I beleive we have to accept death once we enter-this world and yet console ourselves by saying.

Death is like a natural thing, like the closing of a door,
As we start upon a journey to a new and distant shore,
So let our grief be softened and yet not to despair,
We have only placed our dear friend in the loving FATHER'S
Care.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Daily News, Friday September 2, 1988

# Appreciations

## P. Rajeswaran

*The sudden demise of Mr. P. Rajeswaran, Superintendent of Police, Jaffna, at the hands of assassins, was a shock to all who knew him. 'Rajes' as he was popularly known, was a knowledgeable police officer endowed with all the traits that go to make a versatile policeman.*

*An endearing aspect of his nature was his ability to mix with everyone in his usual affable manner. He was never reluctant to go to the assistance of anyone in trouble and usually saw them through their problems.*

*Rajes was never a person who would have expected anyone to harm him. He has paid the supreme penalty for this sense of security. If the killers were only aware that within his severe exterior, he had a sympathetic and caring heart, they would certainly not have pumped those bullets into him.*

*To us, who knew him so well, it is a sad story. To his dear wife and children his loss would be unbearable. I am sure in the police service, the rank and file who respect him, will no doubt silently mourn his passing away.*

Dudley B. Von Hagt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sun Monday, August 15, 1988

Appreciations

# Rajes acted without fear or favour

The officers at Police Hqrs. both gazetted and non-gazetted are yet to recover from the shock at the news of the tragic and untimely death of P. Rajeswaran, Supdt. of Police, Jaffna Division.

To every man upon this earth, death comes sooner or later, but the brutal manner in which "Rajes" as he was affectionately known, came by his death will remain a heinous crime. without parallel.

Rajes was a lovable colleague true and sincere friend. the memories of whom will linger in the hearts of all those who were privileged to know him. It is not always that one will meet a personality of the calibre of Rajes, in this long corridor of our life.

My association with Rajes was over 20 years and an unforgettable episode that crosses my mind was that much publicised Jaffna Church incident on X'mas night in 1968. I was manhandled badly by a group of people and the message received by Rajes through the Police driver was that I was done to death and lay in the premises of the church.

Rajes with Mr. Thavarajah, then ASP Jaffna and Inspector Pussella rushed with a Police party to my assistance. This incident took an unprecedented turn and the Police were accused with having desecrated a religious place of worship.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In this incident when things were going black for the Police not due to their fault, but "Politics" Rajes whispered in my ear "Carlyle I will sink or swim with you".

This incident culminated with the then ASP Mr. Thavarajah, I. P. Pussella. Rajes and self suffering interdiction. This was the dedication he exercised for a friend even in the face of peril.

Born into a highly respected and God-fearing family from Jaffna, Rajes was educated at St. Thomas' College, Colombo. Being a leading Cadet, an athlete of no mean repute, he displayed his prowess as an outstanding hockey player. As Prefect, he was respected by all his contemporaries. He for a short time was in the tutorial staff of St. Thomas' College Guruthalawa, before he joined the Police.

With all his achievements, the doors of the Police Dept. were wide open to him and was soon ready to serve his people. His brother Justice P. Vaithiyalingam walked through the halls of justice with eminent grace, but predeceased him.

Rajes was soft spoken, quite gentle and generous, but always maintained a high standard of discipline and acted without fear or favour. He was very popular with his peers as well as his subordinates, Fun-loving unassuming and ever willing to help any one who sought his guide.

He was a very dutiful husband and a loving father whose demise creates an immeasurable void to the family and an irreparable loss to those who knew him I believe we have to accept death once we enter this world and yet console ourselves by saying.

Death is like a natural thing, like the closing of a door. As we start upon a journey to a new and distant shore. So let our grief be softened and yet to despair, we have only placed our dear friend in the loving Father's Care.

**CARLYLE DIAS**
Superintendent of Police.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-9-88 The Island

Appreciation

# Mr. P. Rajeswaran

The great Essayist, Joseph Addison (1672-1719,) who edited the "Sepectator" which was a weekly issue, remaked "Courage that grows from Constitution often forsakes the man when he has occasion for it; Courage which arises from a sence of duty acts in uniform manner."

The late Mr P. Rajeswaran had the courage to remain in Jaffna when he was ordered to continue after the usual stint of six months. He believed in complying with orders and maintained a very high standard of discipline that was the indelible stamp of officer and gentleman.

His father the Late Dr. Ponnampalam who was an eminent physicion in Malaysia and his brother the Late Justice Vaithilingam had wanted him to take to the profession like medicine, law or teaching but young Rajeswaran had chosen to serve his country starting his career as a Sub Inspector of Police. Having served in many parts of the island and by dint of perseverance efficiency and intergnity he was promoted to the rank of Assistant Superintedent of Police. According to the Great Bard of Statford-on-Avon Perseverance keeps honour bright. To have none is to hang out of fashion like a rusty nail in monumntal mockery". Always humble and extremely pleasant in his dealings not only with the members of the public but also with his colleagues and his subordinates, he endeared himself

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to everyone who came in contact with him. His family and friends will ass this amiable young Police Officer who is certainly worthy of emulation.

Mr. Rajeswaran may not have died with his boots on in ac'ual combat. But he was a victim of a surprise and senseless attack. The eruel hand of fate snufied out this bright candle in the prime of his life.

"When time ealled him to live or die, he did both like a frince May the great Creator grant him eternal Rest and consolation to his family".

R. C. Thavarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Sunday Times Sunday August 28, 1988

# I will sink or swim with you - Rajes

Police officers both gazetted and non - gazetted are yet to recover from the shock at the news of the tragic and untimely death of P. Rajeswaran, Supdt of Police. Jaffna Division.

To every man death comes sooner or later, but the brutal manner in which "Rajes" came by his death will remain a heinous crime.

Rajes, was a lovable Colleague, true and sincere friend. His memory will linger in the hearts of all those who were privileged to know him. It is not always that one will meet a personality of the calibre of Rajes.

My association with Rajes, was over 20 years and an unforgettable episode that crosses my mind was that much publicised Jaffna Church incident on X' Mas night in 1968. I was manhandled badly by a group of people and the message received by Rajes through the Police driver was that I was done to death and lay in the premises of the church. Rajes with Mr. Thavarajah, then ASP Jaffna and Insp. Pussella rushed with a police party to my assistance. This incident took an unprecedented turn and the police were accused of having desecrated a religious place of worship. In this incident when things were going black for the Police not due to their fault, but "Politics" Rajes whispered in my ear "Carlyle I will sink or swim with you".

This incident culminated with the then ASP Mr. Thavarajah, I. P. pussella, Rajes and myself suffering interdiction. This was the dedication he exercised for a friend even in the face of peril.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Born into a highly respected and God - fearing family from Jaffna, Rajes was educated at St. Thomas' College, Colombo. Being a leading Cadet, an athlete of no mean repute, he displayed his prowess as an outstanding hockey player. As prefect, he was respected by all his contemporaries. He was for a short time on the Tutorial Staff of St. Thomas' College, Guruthalawa, before he joined the Police.

With all his achievements, the doors of the Police Dept. were open to him and was soon ready to serve his people.

He was a dutiful husband and a loving father whose demise creates an immeasurable void in the family and an irreparable loss to those who knew him. I believe we have to accept death once we enter this world and yet console ourselves by saying-

Death is like a natural thing, like the closing of a door,
As we start upon a journey to a new and distant shore,
So let our grief be softened and yet not despair,
We have only placed our dear friend in the loving Father's care.

**Carlyle Dias**
Superintendent of Police

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாவுக்கு விளக்கேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலிஸ் அத்தியட்சகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Appreciation of late Mr. Ponnampalam Rajeswaran.

### Deputy Inspector General of Police

The untimely demise on 07-08-1988 of Mr. Ponnampalam Rajeswaran, Superintendent of Police, Jaffna at the matured age of fifty seven, has removed from our midst a loyal Police Officer. His posthumous elevation as Deputy Inspector General of Police - a most coveted post in the Police department reflects highly of his devotion, dedication and duty consciousness.

Having had his higher education at St. Thomas College; Mount Lavinia on his return to the Island from Malaysia with his parents, he joined the Police Department as a Sub-Inspector and Served in various Parts of the Country in different capacities as Inspector, Assistant Superintendent and Superintendent. He came on transfer to this district as Superintendent of Police last year much against his wish, when the situation was generally abnormal. Though my association with him was only for a short period, he impressed me as a disciplined Police Officer.

An affectionate husband, a loving father he leaves behind his wife Thilagagnanam, two sons, Thevarajan, Tharumarajan and two daughters Kesavarani, and Soruparani. His sudden death is an irreparable loss to them, to his many relatives, friends and to the Police Service.

The Secretariat,
Jaffna.
31-08-1988

V. M. Panchalingam
District Secretary and
Government Agent,
Jaffna District.

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி உரை

ஆன்மாக்கள் தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப பிறவி எடுக்கின்றன. அவைக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் வரை இவ்வுலகில் வாழ்கின்றன. இவ்வுலகில் என்று பிறப்பு நேர்ந்து விடுகின்றதோ அன்றே இறப்பும் நிச்சயம் என்பது உறுதியாகிறது. இப்பிறப்பும் இறப்பும் எம் ஆணைக்குட்பட்டு நிகழ்வனவல்ல, ஆயினும் இவை மன உணர்ச்சிகளைத் தூண்டுவனவாகவே அமைகின்றன. உணர்ச்சிகளினால் உந்தப்பட்ட கவலை என்ற கடலில் ஆழ்த்தி விட்டது, திரு. இராஜேஸ்வரனின் திடீர் மறைவு என்ற செய்தி. அன்னார் தாய், மனைவி, மக்கள் சகோதரர்கள் சிநேகிதர்கள் மற்றும் எல்லோரையும் தனது திடீர் மறைவினால் மீளாத் துயரத்தில் வருந்த விட்டு இறைவனடி எய்தி விட்டார். இதுவும் இறைவனின் ஏற்பாடு என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்னார் கருகம்பனைக் கிராமத்திலே எமது ஆலயத்தோடு தொடர்புடைய ஒரு பழம் பெரும் குடியிற் தோன்றியவர். அம் மரபுக்கேற்ப எம் ஆலய உற்சவங்களிலும் அவர் கலந்து கொள்ளத் தவறியவரல்லர். அவர் என்றும் முக மலர்வோடு தன்னடக்கமுள்ளவராகவும் காட்சி அளிப்பார்.

ஆடல் வல்லானாகிய எமது இறைவன் ஆன்மாக்களின் துயர் துடைப்பவனாகிப், படைப்பவனாகிப் பொன்னம்பலவனாக விளங்க. மானிடப் பொன்னம்பலவனும் வைத்தியனாகி, சமாதான நீதிபதியாகி, மக்களின் நோய்தீர்த்து, இடர்களைந்து பாது காவலனாக விளங்க, அவர் மகன் இராஜேஸ்வரனும் காவல்துறைச் சேவகனாய், மக்கள் துயர் துடைப்பவனாக, நல்லவரை வாழ வைப்பவனாக விளங்கியது, மிக ஆச்சரியப்படக் கூடிய ஒன்றே.

காலம் நியதியோடு கூடிய அவரின் உடம்பும் பிரிந்தது. அவரின் ஆன்மா சாந்தியடைவதாக. நகுலேஸ்வரன் இன்னருள் கூடுவதாக. அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சகோதரர்கள், உற்றார் அன்னாரின் ஆன்மா சிவனிடம் அடைந்து விட்டது என்று மனம் தேற நாம் எல்லோரும் நகுலேஸ்வரனைப் பிரார்த்திப்போமாக.

ஓம், சாந்தி.

நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை. — கு. நகுலேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவரும் வழிகாட்டியுமான, திரு: இராஜேஸ்வரன் அவர்களின் மரணச் சடங்கில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டிய கடப்பாடு உடையவர்கள் ஆகின்றோம். எனவே எங்கள் தலைவரின் மரணச் செய்தி கேட்டு அநுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், நேரில் வந்து ஈமக்கிரியைகளிற் பங்கு பற்றி ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றிய அன்பர்கள், உற்றார், உறவினர், அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் கிரியைகள் சிறப்புடன் நிகழ அயராது உழைத்த உற்றார், உறவினர், நண்பர்கள் சிறப்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் பகுதியினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும் மலர்வளையம் வைத்துக் கௌரவித்த பொலிஸ் இலாகாவினர் எல்லோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெருவித்துக் கொள்ளுகின்றோம்.

இந் நினைவு மலருக்குப் பா யாத்துத் தந்தவர், விடயங்கள் கொடுத்தவர்களுக்கும், இம் மலரை குறுகியகாலத்தில் அச்சிட்டுத்தந்த ஸ்ரீ லங்கா அச்சகத்தாருக்கும் எமது நன்றி.

தொல்புரம்

மனைவி, மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIRI LANKA PRINTING WORKS, JAFFNA
PHONE: 24175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org